# தான்சானியா ஐக்கிய குடியரசின் அதிபர் இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணம் (அக்டோபர் 8-10, 2023)

அக்டோபர் 06, 2023

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவின் அழைப்பின் பேரில், தான்சானியா ஐக்கிய குடியரசின் அதிபர் திருமதி சாமியா சுலுஹு ஹாசன், 8-10 அக்டோபர் 2023 வரை இந்தியாவுக்கு வருகை தருகிறார். அவருடன் பல்வேறு அமைச்சர்கள் மற்றும் ஒரு பெரிய வணிகக் குழுவும் வர உள்ளனர்.

அதிபர் சாமியா சுலுஹு ஹசன் புதுதில்லியில் தங்கியிருக்கும் போது குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை சந்திப்பார். அவருக்கு ராஷ்டிரபதி பவன் முன்புறத்தில் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டு, அதன்பின் பிரதமருடன் விரிவான இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்படும். அதிபர் சாமியா சுலுஹு ஹசனை கௌரவிக்கும் வகையில் குடியரசுத் தலைவரால் அரச விருந்து ஒன்றும் நடத்தப்படும்.

10 அக்டோபர் 2023 அன்று புதுதில்லியில் நடைபெறும் வணிக மற்றும் முதலீட்டு மன்றத்தில் அதிபர் சாமியா சுலுஹு ஹாசனும் பங்கேற்பார்.

8 ஆண்டுகளுக்குப் பிறகு தான்சானியாவில் இருந்து அதிபரின் இந்தியா வருகை நடைபெறுகிறது. வரவிருக்கும் பயணம் இந்தியா மற்றும் தான்சானியா இடையே வரலாற்று மற்றும் நட்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.

**புது தில்லி**
**அக்டோபர் 06, 2023**